
# பெற்றோர் மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான தெற்குக் கரோலினா EOCEP பிரசுரம்

## மேலோட்டப்பார்வை

- இறுதிப் பாடத் தேர்வுத் திட்டம் (**EOCEP**) தெற்குக் கரோலினாவில் (**SC**) ஆங்கிலம் 2, இயற்கணிதம் 1, உயிரியல் 1, மற்றும் அமெரிக்க வரலாறு மற்றும் அரசியல் போன்றவற்றை உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிப்பதற்கான மாநிலம் தழுவிய ஒரு மதிப்பீட்டு இறுதிப் பாடத் தேர்வுத் திட்டம்.
- இந்தப் பாடத் திட்டங்களில் மாணவரின் இறுதித் தரநிலைக் கணக்கீடுகளுக்கு **EOCEP** தேர்வு மதிப்பெண்கள் 20% எடுத்துக் கொள்ளப்படும்.
- **EOCEP** தேர்வுகள் இத்தனை வருடங்களாக இந்தப் பாடங்களில் மாணவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதைப் பற்றிக் கணிக்கும். இந்த தேர்வுக் கேள்விகள் தெற்குக் கரோலினா கல்வியியல் தரத்திற்கு இணையாக அமைக்கப்பட்டுள்ளன. நான்கு பாடங்களின் தரங்களும் **https://ed.sc.gov/instruction/standards/** -இல் இடுகை இடப்படும்.
- **EOCEP** தேர்வுகளுக்குக் கால நேரம் இல்லை. ஆனால் ஒவ்வொரு தேர்வும் ஒரு பள்ளி வேலை நாளில் முடிக்கப்பட வேண்டும்.
- இணையத் தேர்வு அமைப்பு ஒரு மாணவர் இயற்கணிதம் 1 மற்றும் உயிரியல் 1 தேர்வுக்கு உபயோகிக்கும் கணக்கிடுவான் மற்றும் வரைபடக் கருவிகளில் நிறுவப்பட்டுள்ளது. அனைத்துக் கையடக்கக் கணக்கிடுவான்களும் கணக்கிடுவான் பயன்பாட்டிற்கான **EOCEP** தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், இது **https://ed.sc.gov/tests/high/eocep/** -இல் கிடைக்கிறது.
- தெற்குக் கரோலினா உயர்நிலைப் பள்ளிப் பட்டயத்தைப் பெற, மாணவர்கள் **EOCEP** நடத்தும் தேர்வுகளில் உயிரியல் மற்றும் அமெரிக்க வரலாற்றுப் பாடத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.
- தெற்குக் கரோலினா மாற்று மதிப்பீடுகளில் (**SC-Alt**) பங்கேற்கத் தகுதியுடையவர்களைத் தவிர, குறைபாடுள்ள மாணவர்கள் தங்கள் **IEP** -கள் அல்லது 504 திட்டங்களுக்குத் தேவையான பொருத்தமான வசதிகளுடன் இந்தத் தேர்வுகளைத் தேர்வு செய்ய வேண்டும். **SC-Alt** தேர்வுகள் குறிப்பிடக்கூடிய அறிவுசார் குறைபாடுள்ள மாணவர்களை மதிப்பிடுகின்றன. குறைபாடுள்ள மாணவர்களுக்கான வசதிகளைப் பற்றிய விவரங்கள் பின்வரும் இணைப்பில் உள்ளன: **https://ed.sc.gov/tests/assessment-information/testing-swd/**.
- **ML** மாணவர்கள் தங்கள் **ILAP** -களால் குறிப்பிடப்பட்டால், பொருத்தமான வசதிகளைப் பயன்படுத்தி **EOCEP** தேர்வுகளில் பங்கேற்க வேண்டும்.
- ஆங்கிலம் 2, இயற்கணிதம் 1 மற்றும் உயிரியல் 1 **EOCEP** தேர்வுகள், கூட்டாட்சிப் பொறுப்புக்கூறல் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனைத்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் நிர்வகிக்கப்படுகின்றன.

## தேர்வு வடிவம்



- **EOCEP** தேர்வுகள் கணினி அடிப்படையிலான இணைய வடிவத்தில் மட்டுமே நிர்வகிக்கப்படுகின்றன. இணைய மதிப்பீடுகளைப் பயன்படுத்த இயலாத மாணவர்களுக்கு, அவர்களின் **IEP** -கள், **504** திட்டங்கள் அல்லது **ILAP** -களால் குறிப்பிட்டபடி, காகித வடிவத்தில் தேர்வுகள் இருக்கலாம்.
- ஆங்கிலம் 2 தேர்வுகள் எழுத்துப் பிரிவு மற்றும் வாசிக்கும் பிரிவு என இரண்டு பகுதிகளாகத் தனித்தனியாக நிர்வகிக்கப்படும். எழுத்துப் பிரிவு எழுதும் அடிப்படையிலான எழுதும் கேள்வியைக் (**TDW**) கொண்டிருக்கும். **TDW** கேள்வியானது, அந்தக் குறிப்பிட்ட பத்தியை உடனடியாக எழுதும் தொடக்கத்தைக் கொண்டுள்ளது. மாணவர்கள் உரையை ஆய்வு செய்து, பத்தியில் இருந்து ஆதாரங்களை வழங்கும் விதமாக ஒரு கட்டுரை எழுத வேண்டும்.
- இயற்கணிதம் 1, உயிரியல் 1, அமெரிக்க வரலாறு மற்றும் அரசியலமைப்பு மற்றும் ஆங்கிலம் 2 வாசிப்புத் தேர்வுகள் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்ட, தொழில்நுட்பம் மேம்படுத்திக் கட்டமைக்கப்பட்ட பதில் மற்றும் தூண்டுதல் தொகுப்புகள் உள்ளிட்ட இயந்திரம் மூலம் மதிப்பெண் வழங்கப்படும் கேள்விகளைக் கொண்டிருக்கும். தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் வெவ்வேறு வழிகளில் கணினியில் பதிலளிக்க வேண்டும்.



## தனிப்பயிற்சி மற்றும் இணையக் கருவிகள் பயிற்சி (OTT)

- இணைய மதிப்பீட்டுத் தனிப்பயிற்சி என்பது இணையத் தேர்வு முறையை எவ்வாறு நடத்துவது என்பதற்கான படிப்படியான வழிமுறைகளை வழங்கும் மற்றும் மென்பொருளின் முக்கிய அம்சங்களைப் பற்றிய விரிவான விளக்கங்களை வழங்கும் காணொளிகளின் தொகுப்பாகும். மாணவர்களால் முதல் தேர்வு நாளுக்கு முன்னதாகத் தனிப்பயிற்சி மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.
- இணையக் கருவிகள் பயிற்சி (**OTT**) என்பது ஒரு கணினித் தொகுதி ஆகும். இது தேர்வுச் சூழலை உருவகப்படுத்துகிறது மற்றும் மாணவர்கள் **EOCEP** தேர்வுகளை நிர்வகிப்பதற்கு முன் மென்பொருள் மற்றும் கருவிகளைச் சரிபார்க்கும் முயற்சிக்கு ஒரு வாய்ப்பை அனுமதிக்கிறது. தேர்வுகளில் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான கேள்விகளின் மாதிரிகள் **OTT** -இல் சேர்க்கப்பட்டுள்ளன.
- **EOCEP** -க்கான **OTT** மற்றும் இணைய மதிப்பீட்டுத் தனிப்பயிற்சியைப் பின்வரும் இணையதளத்தில் (**Google Chrome** -ஐப் பயன்படுத்தி): https://portal.te.drcedirect.com/SC அணுகலாம்.

## மதிப்பெண் அறிக்கைகள்

- ஒவ்வொரு தேர்வுக்கும் செயல்திறன் நிலைகளுக்கு ஏற்ப (உதாரணமாக, மீறுகிறது, சந்திக்கிறது, குறைந்தபட்சம் சந்திக்கிறது மற்றும் சந்திக்கவில்லை) அளவுகோல் மதிப்பெண்கள் மற்றும் எழுத்துத் தரங்களாக மாணவர் முடிவுகள் தெரிவிக்கப்படுகின்றன. அளவுகோல் மதிப்பெண்கள் 0 மற்றும் 100 வரை இருக்கும், ஆனால் சரியான பதில்களின் சதவீதத்திற்கு சமமாக இருக்காது . ஒவ்வொரு தேர்வுக்கும், மாணவர் செயல்திறன் "குறைந்த," "நடுத்தர" அல்லது "உயர்" போன்ற கல்வித் தரங்களுடன் தொடர்புடைய வகைகளிலும் தெரிவிக்கப்படுகிறது.
- தனிப்பட்ட மாணவர் அறிக்கைகளின் காகித நகல்கள் பள்ளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த அறிக்கைகள் பெறப்பட்டதைத் தொடர்ந்து பெற்றோர்கள் மற்றும் பள்ளிகளுக்கு விரைவில் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு மாவட்டங்களுக்கு உள்ளது.

## பிற வளங்கள்

- **EOCEP** தேர்வுகளைத் தேர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ள மாணவர்களுக்குப் பள்ளியின் முதல் நாள் அன்றே கல்வித் தரங்களுக்கு ஏற்பக் காகித அல்லது மின்னணு நகல்கள் வழங்கப்பட வேண்டும்.
- மாதிரித் தேர்வுக் கேள்விகள், தேர்வு வரைபடங்கள் மற்றும் மாநிலத் தேர்வுச் சாளரத் தேதிகள் **EOCEP** வலைப்பக்கத்தில் https://ed.sc.gov/tests/assessment-information/quick-links-for-teachers/-இல் கிடைக்கின்றன.